FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8348084

1. District : Krishnagiri PS: V & AC Year: 2026 FIR No.: 7/AC/2026 Date: 18.07.2026
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The PC Act, 1988 as amended Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: in 2018. Sections பிரிவுகள்: 7(a) r/w 12
(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 17.07.2026 Date to : Before 17.45 hrs.
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from : 18.07.2026 Time to : 15.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time :
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Computer Typed
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: 4 km East
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : Taluk office, krishnagiri
முறைக் காவல் எண் முகவரி krishnagiri District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. G. Sakthivel (b) Father's/ Husband's Name : S.V. Govindasamy
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : Age 51 (d) Nationality : Indian (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : PA TO SDRO (g) Address : Special District Revenue office [L A]
தொழில் முகவரி State Highways.
krishnagiri.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

V. Ganesan Age (42) S/o Venkatesan, HQ. Tahsildar Taluk office krishnagiri District. and 9 other's.
(Separate Sheet Enclosed)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted :

Separate Sheet Enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

18/07/2026

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

18.07.2026 – 16.10 Hrs.

Name: பெயர் S. Ravi
Rank: நிலை .....No. எண் .....
Inspector of police,
V & AC, Krishnagiri.

கிருஷ்ணகிரி மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்.7/AC/2026 u/s 7 & 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண்.7-ன் தொடர்ச்சி.

வ.எண்.	தெரிந்த குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
1.	திரு.V.கணேசன், வயது 42, த/பெ வெங்கடேசன், தலைமையிடத்து துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
2.	திரு.K.பிரபாகரன், வயது-34, த/பெ. கதிரவன், வருவாய் ஆய்வாளர், வேப்பனப்பள்ளி உள்வட்டம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
3.	திரு.S.சரவணன், வயது-40, த/பெ. சுப்பிரமணி, கிராம நிர்வாக அலுவலர், 24.மணவார்ணப்பள்ளி வருவாய் கிராமம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
4.	திரு.S.சீனிவாசன், வயது-39, த/பெ. சிவசண்முகம், வருவாய் ஆய்வாளர், ஆலப்பட்டி உள்வட்டம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
5.	திருமதி.L.அனிதா, வயது-38, க/பெ. இலட்சுமணன், கிராம நிர்வாக அலுவலர், 95 கத்தேரி-2 வருவாய் கிராமம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
6.	திரு.A.சுரேஷ்குமார், வயது-33, த/பெ. அண்ணாதுரை, கிராம நிர்வாக அலுவலர், 78.கூளியம் கிராமம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
7.	திரு.D.சிவக்குமார், வயது-53, த/பெ. தெய்வசிகாமணி, முதுநிலை வரைவாளர், வட்டாச்சியர் அலுவலகம், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
8.	திரு.R.பால்ராஜ், வயது-50, த/பெ. ராமப்பன், கதவு எண்.161/1A, கோடிப்பள்ளி கிராமம் மற்றும் அஞ்சல், கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
9.	திரு.B.குமார், வயது-45, த/பெ. போஸ், கதவு எண்.1/25-6, வஹாப் நகர், சந்தியா மகளிர் கலை கல்லூரி எதிரில் கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.
10.	திரு.A.R.நூர்முஹமத், வயது-34, த/பெ. அப்துல் ரஷித், கதவு எண்.17/41, அங்கூர் ஷேக் உசேன் தெரு, கோட்டை, பழையப்பேட்டை, கிருஷ்ணகிரி வட்டம் மற்றும் மாவட்டம்.

கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/AC/2026 u/s 7 and 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் வ.எண். 12-ன் தொடர்ச்சி.

இன்று 18.07.2026-ம் தேதி 15.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்தபோது, திரு.G.சக்திவேல், சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமாக புகாரின் விவரம் பின்வருமாறு: அனுப்புநர்: திரு.G.சக்திவேல், வயது-51, சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர், கிருஷ்ணகிரி மாவட்டம். பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, கிருஷ்ணகிரி. ஐயா, நான் கிருஷ்ணகிரி, மாநில நெடுஞ்சாலை, தனி மாவட்ட வருவாய் அலுவலரின் (நி.எ), நேர்முக உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். மேலும், கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சிதலைவர் அவர்களின் செயல்முறை ஆணை Roc.No. 1096/2026/A1, நாள் 07.07.2026-ன்படி சிறப்பு மாவட்ட ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்கள் நிலத்திற்கான அனுபோகச் சான்று, சிட்டாவில் பெயர் சேர்க்க, நீக்க, பிறப்பு இறப்பு சான்றிதழ் மற்றும் பட்டா மாறுதல் கோரியும், உட்பிரிவு செய்யகோரி பெறப்படும் மனுக்கள், நில அளவை பிரிவு மற்றும் வட்ட வழங்கல் பிரிவில் பணிபுரியும் அலுவலர்கள் பல்வேறு பணிகளுக்காக அலுவலகத்திற்கு வரும் பொதுமக்களிடம் அலுவல் நேரத்திலும், அதன்பின்பும் கையூட்டு கேட்டுப் பெறுவதாகவும், எனக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர், கிருஷ்ணகிரி ஆயுதப்படை பெண் காவலர் 2110 திருமதி.ட.ராமி, பெண் காவலர் 2049 திருமதி.K.சத்யா மற்றும் காவல் குழுவினருடன் புறப்பட்டு மாலை 17.45 மணிக்கு கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டேன். வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வெளியே யாரும் செல்லாதவாரும், வெளியில் இருந்து உள்ளே யாரும் வராதவாறும் காவலர்களை கொண்டு காப்பு போடப்பட்டது. நானும், காவல் ஆய்வாளர் அவர்களும் வட்டாட்சியர் அலுவலகத்தில் பணியில் இருந்த தலைமையிடத்து துணை வட்டாட்சியர்

திரு.V.கணேசன் அவர்களிடம் அறிமுகம் செய்துகொண்டு, திடீர் ஆய்வு செய்ய வந்திருக்கும் விவரத்தை தெரிவித்தேன். தலைமையிடத்து துணை வட்டாட்சியரிடம் விசாரிக்க, கடந்த 16.03.2026-ம் தேதி முதல் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் வட்டாட்சியர் குறித்து விசாரிக்க, வட்டாட்சியர் அவர்கள் காலை அலுவலகத்திற்கு வந்த சிறிது நேரத்திலேயே அலுவல் சம்மந்தமாக வெளியில் சென்றுவிட்டதாக கூறினார். பின்னர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.V.கணேசன் அவர்களிடம் அரசு கணக்கில் உள்ள பணம் குறித்து கேட்க, கிருஷ்ணகிரி வட்டாட்சியர் (பொது) என்ற பெயரில் பாரத ஸ்டேட் வங்கியில் சேமிப்பு கணக்கு எண் 30281842067 பராமரிக்கப்பட்டு வருவதாக தெரிவித்து, வங்கி கணக்கு புத்தகத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை பார்வையிட்டதில் 13.05.2026-ம் தேதி வங்கியில் ரூ.22,72,860/- இருப்பாக உள்ளது. அதன்பின்னர், 17.07.2026-ம் தேதி வரை எந்த பதிவுகளும் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. மேலும், அவர் எடுத்து ஆஜர் செய்த இந்தியன் வங்கி கணக்கு புத்தகத்தை பார்வையிட்டதில் Charge Census Officers Rural, Krishnagiri என்ற பெயரில் 09.06.2026-ம் தேதி வங்கி கணக்கு எண் 8327218067 ஆரம்பிக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அதனை பார்வையிட்டதில் 03.07.2026-ம் தேதி வங்கியில் ரூ.50,000/- இருப்பாக உள்ளது. அதன்பின்னர், 17.07.2026-ம் தேதி வரை எந்த பதிவுகளும் மேற்கொள்ளப்படாமல் உள்ளது. பின்னர், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் அவர்களிடம் பணம் ஏதேனும் வைத்துள்ளீர்களா என்று கேட்டதற்கு, தனது பேண்டின் வலது முன்புற பாக்கெட்டிலிருந்து ரூ.17,500 எடுத்து ஆஜர் செய்து, மக்கள் தொகை கணக்கெடுப்பு பயிற்சியில் கலந்துகொள்ளும் அலுவலர்களின் டீ மற்றும் இதர செலவுகளுக்கு முதல் தவணையாக 03.07.2026-ம் தேதி ரூ.50,000/- இந்தியன் வங்கி கிளையில் வரவு வைக்கப்பட்டது என்றும், அதனை வட்டாட்சியர் அவர்களின் ஒப்புதல் பெற்று காசோலை மூலம் 15.07.2026-ம் தேதி ரூ.50,000/-ஐ வங்கியிலிருந்து எடுத்து, டீ மற்றும் இதர செலவுகளுக்கு கொடுத்தது போக மீது தொகையினை வைத்துள்ளதாக தெரிவித்து, செலவு செய்ததற்கான இரசீதுகளை ஆஜர் செய்தார். மேற்படி இரசீதுகளை பார்வையிட்டதில் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.V.கணேசன் தெரிவித்த விவரம் சரியாக இருந்ததால், மேற்படி பணம்

ரூ.17,500/- அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. அதன்பின், தலைமையிடத்து துணை வட்டாட்சியர் முன்னிலையில் அலுவலகத்தில் பணியில் இருந்த 1) திரு.K.கிருஷ்ணன், 2) திருமதி.R.செல்வி, 3) திருமதி.M.பவித்ரா, 4) செல்வி.M.யோகேஸ்வரி, 5) திரு.M.இளங்கோ, 6) திருமதி.T.மலர்கொடி, 7) திரு.M.ராஜா, 8) திரு.P.விக்னேஷ், 9) திருமதி.N.சூரியகலா மற்றும் 10) திருமதி.D.செல்வி ஆகியோரை விசாரித்து, சோதனை செய்து, அவர்களது இருக்கைகளும் சோதனை செய்யப்பட்டது. பின்னர், அந்த அலுவலகத்தில் இருந்த பொதுமக்கள் 1) M.G.சின்னசாமி, 2) திரு.S.அன்பரசன், 3) திரு.P.சின்னதம்பி, 4) திரு.G.வெங்கடேசன், 5) திருமதி.G.முனிலட்சுமி மற்றும் 6) திரு.B.செல்வராஜ் ஆகியோர்களிடம் விசாரணை செய்து சோதனை மேற்கொண்டேன். திடீர் ஆய்வின்போது வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த வேப்பனப்பள்ளி வருவாய் ஆய்வாளர் திரு.K.பிரபாகரன் என்பவரிடமிருந்து பணம் ரூ.1,02,770/- (500 X 50 + 200 X 339 + 100 X 87 + 50 X 18 + 20 X 16 + 10 X 5), ஆலப்பட்டி உள்வட்ட வருவாய் ஆய்வாளர் திரு.S.சீனிவாசன் என்பவரிடமிருந்து பணம் ரூ.5,000/- (500 X 10), 78 கூளியம் கிராம நிர்வாக அலுவலர் திரு.A.சுரேஷ்குமார் என்பவரிடமிருந்து பணம் ரூ.7,500/- (500 X 15), 95 கத்தேரி-2 கிராம நிர்வாக அலுவலர் திருமதி.L.அனிதா என்பவரிடமிருந்து பணம் ரூ.9,000/- (500 X 18), மணவாரனப்பள்ளி கிராம நிர்வாக அலுவலர் திரு.S.சரவணன் என்பவரிடமிருந்து பணம் ரூ.35,400/- (500 X 67 + 200 X 9 + 100 X 1) என கணக்கில் வராத பணம் ரூ.1,59,670/-, கிருஷ்ணகிரி வட்டாட்சியரின் கீழ் பணிபுரியும் வருவாய் ஆய்வாளர்கள், கிராம நிர்வாக அலுவலர்கள் மற்றும் அலுவலர்கள், தங்களிடம் தேவைகளை நிறைவேற்றிகொள்ள வரும் பொதுமக்களிடமிருந்து கையூட்டாக பெற்ற பணமாக இருக்கக்கூடும் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் ஆய்வின்போது, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு தகவல் தெரிவித்ததன்பேரில் சுமார் 18.45 மணிக்கு வட்டாட்சியர் திருமதி.V.ராஜலட்சுமி அவர்கள் அலுவலகம் வந்து ஆய்வுக்குழுவினரிடம் அறிமுகம் செய்துகொண்டார். பின்னர் வட்டாட்சியர் அலுவலகத்தின் முதல் தளத்தில் உள்ள நில அளவை பிரிவிற்கு சென்று பணியில் இருந்த 1) திருமதி.R.நித்யபிரியா, 2) திருமதி.S.பிரியா, 3) திருமதி.V.K.பிரியா,

4) திருமதி.S.ஆனந்தி, 5) செல்வி.M.இந்துமதி மற்றும் 6) திரு.R.கௌதம்ராஜ் ஆகியோரிடம் விசாரித்து, சோதனை செய்து, அலுவலர்களின் உடமைகளும் இருக்கைகளும் சோதனை செய்யப்பட்டது. சோதனையின்போது முதுநிலை வரைவாளர் திரு.D.சிவகுமார் வைத்திருந்த கணக்கில் வராத பணம் ரூ.2,580/- (500 X 1 + 200 X 5 + 100 X 6 + 50 X 8 + 20 X 3 + 10 X 2), கையூட்டாக பெற்ற பணமாக இருக்ககூடும் என்பதால், செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. பின்னர், வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்த நில தரகர்கள் 1) திரு.R.பால்ராஜ் வைத்திருந்த பணம் ரூ.5,050/- (500 X 10 + 20 X 2 + 10 X 1), திரு.B.குமார் வைத்திருந்த பணம் ரூ.10,200/- (500 X 20 + 200 X 1), மற்றும் புரோக்கர் திரு.A.R.நூர்முஹம்மத் வைத்திருந்த பணம் ரூ.44,700/- (500 X 89 + 100 X 2), வட்டாட்சியர் அலுவலகத்தில் பணிபுரியும் அலுவலர்களுக்கு கையூட்டு கொடுத்து தங்களது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ள வைத்திருந்த பணம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில், செயல்முறை நடவடிக்கையில் கைப்பற்றப்பட்டது. திடீர் ஆய்வின்போது, கைப்பற்றப்பட்ட பணம் ரூ.2,22,200/-, கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் மற்றும் திரு.K.பிரபாகரன், திரு.S.சரவணன், திரு.S.சீனிவாசன், திரு.L.அனிதா, திரு.A.சுரேஷ்குமார், திரு.D.சிவக்குமார், திரு.R.பால்ராஜ், திரு.B.குமார், மற்றும் திரு.A.R.நூர் முஹம்மத் ஆகியோரின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை திடீர் ஆய்வின்போது தயார்செய்த செயல்முறை நடவடிக்கையுடன் ஆஜர்படுத்துகிறேன். கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகத்தில் திடீர் ஆய்வு மேற்கொண்டபோது, மேற்படி அலுவலக பொறுப்பில் இருந்த தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.V.கணேசன் மற்றும் சம்மந்தப்பட்ட நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, ஒப்பம் திரு.G.சக்திவேல்.

சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, மேற்கு சரக, காவல் கண்காணிப்பாளர், அவர்களின் உத்தரவுபடி மேற்கண்ட புகாரின்பேரில், கிருஷ்ணகிரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 7/AC/2026 u/s 7 and 7(a) r/w 12 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி இன்று 18.07.2026-ம் தேதி 16.00 மணிக்கு வழக்கு பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார் ஆகியவற்றை மாண்பைமிகு மாவட்ட

முதன்மை மற்றும் அமர்வு நீதிபதி, கிருஷ்ணகிரி அவர்களுக்கும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

சார்பு ஆய்வாளர்,
மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு,
கிருஷ்ணகிரி.